மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறைகளிலே இடம் ஒதுக்கி பிறகு இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லும் போது கிடைக்காவிட்டால் முன்னாளுக்கு கொடுத்தீர்கள், இந் நாளுக்கு இல்லையா என்கின்ற ஒரு வாதம் எழும். அதை யெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் இந்தச் செயல்களைச் செய்ய முடியும்.

(9-20)

சீர்காழியில் புதிதாக உரிமையியல், குற்றவியல் நீதிமன்றம்.

* 2241 டாக்டர் மா. பன்னீர்செல்வம்:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) சீர்காழியில் புதிதாக உரிமையியல், குற்றவியல் நீதி மன்றம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி உரிமையியல் நீதிமன்றம் நிலையான அரசு கட்டிடத்தில் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இந்நீதிமன்றத்திற்கு புதிய கட்டிடம் தற்போது கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. சீர்காழி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு கட்டிடம் கட்டும் திட்டம் பரிசீலிக்கப் பட்டு நிதி பற்றாக்குறை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. மா. பன்னீர்செல்வம்: பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியில் உள்ள உரிமையியல், குற்றவியல் நீதிமன்ற கட்டி டங்கள் எல்லாம் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அந்தக் கட்டிடத்தில் உள்ள ஏனைய அறைகளில் உள்ள அந்த நாற்காலிகள் எல்லாம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. ஆகையினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்து புதியதாக அங்கு கட்டிடம் அமைத்துத் தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர் களே, இந்தக் கட்டிடம் இப்போது வட்டாட்சி அலுவலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடத்தினுடைய

1989 அக்டோபர் 31]

வயது 60 ஆண்டுகள் ஆகிறது. அது பழுதடைந்திருப்பதாக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 12,30,000 ரூபாயிலே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவர அரசு ஆலோசனை செய்தது. நிதிப் பற்றாக்குறை காரணமாக அதை நிறைவேற்ற முடியவில்லை. நிதி நிலையை அனுசரித்து அது ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, பரமக்குடி, முதுகுளத்தூர், இராமநாதபுரம், திருவாடானை ஆகிய ஊர்களில் உள்ள உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லை என்பது அரசின் கவனத்தில் வந்துள்ளதா? அந்த இடங்கள் நிரப்பப்படுமா? சிவகங்கை நீதிபதி வாரம் ஒரு முறை இந்த 4 ஊர்களுக்கும் மாலை 5 மணிக்கு வந்து 6 மணிக்கு கையெழுத்து மட்டும் போட்டுவிட்டுச் செல்வதைத் தடுக்க உடனடியாக நீதிபதிகளை நியமிக்கும் குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு தொடர்பில்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் நீதிபதிகள் காலம் தவறாமல் வருவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது தமிழ்நாட்டில் 45 இடங்கள் காலியாக இருப்பதாகத் தெரிகிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக அவைகளை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றத்தின் மூலமாக கோரிக்கை விடப்பட்டிருக்கிறது.

திரு. பி. மாரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தாலுக்கா தலைநகரங்களிலும் சிவில், கிரிமினல் நீதிமன்றங்கள் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா? அந்த அடிப்படையிலே எனது தொகுதியைச் சேர்ந்த பெருந்துறை வட்டத்தில் பெருந்துறையைத் தலைநகரமாகக் கொண்ட இடத்திலே கிரிமினல் கோர்ட் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரண்டு கோர்ட்டுகளும் அங்கே அமைக்கப்படுமா என்று நான் கேட்க விழைகின்றேன். அடுத்தபடியாக எங்கள் பகுதியிலே காங்கேயத்தில—என்னுடைய தொகுதியின் தலைநகரமாகிய காங்கேயத்திலே . . . .

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பெருந்துறையிலிருந்து காங்கேயம்

போய் வேறே எங்கேயோ போய்க்கொண்டு இருக்கிறார்கள். மூலக் கேள்வி சீர்காழியைப் பொருத்தது. ஒவ்வொரு தாலுக்கா தலை நகரத்திலும் கூடுமான வரைக்கும் சிவில் நீதிமன்றமும், கிரிமினல் நீதிமன்றமும் இருப்பதாகத் தான் இருக்கிறது. கோரிக்கை வருகின்ற நேரத்தில் உயர் நீதிமன்றத்தை கலந்தாலோசித்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏற்கனவே நீதிமன்றங்களை பொருத்த அறிக்கை கொடுக்கப்பட்டு, அந்த அறிக்கையின் அடிப்படையிலேதான் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம்.

*3522 திரு. இ. புகழேந்தி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே,

ஆம், திருந்திய வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் உயர் நீதிமன்றத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது என்பதற்காக என்னுடைய அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போதைய கட்டிடம் ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் கட்டப்பட்ட கட்டிடம். வயதான நிலையிலே ஆடிக்கொண்டிருக்கிறது. மாவட்ட கட்டிடத்தில் மாவட்ட நீதிமன்றமும் மற்றைய சார்பு மன்றங்களும் உரிமையியல் மன்றமும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் குற்றவியல் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள் எல்லாம் பல்வேறு இடங்களில் பிரிந்து இருக்கின்ற காரணத்தினால் வழக்கறிஞர்களும், பொது மக்களும் கஷ்டப்படுகின்ற நிலைமை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. ஆகவே, பரிசீலனையில் எடுத்துக் கொண்டிருக்கின்ற இந்தப் பணியை அரசு விரைவாகச் செய்து முடிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். செய்து முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.